(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

## 2nd Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் Geography | Three Hours / Gr : 12 (2024) | 22 | T | I, II |

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள் வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது. பகுதி I, 15 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இவ்வினாத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் அ, ஆ, இ என மூன்று பகுதிகள் தரப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி I, பகுதி III ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.

## பகுதி I

1. புவியின் உண்மையான நிலத்தோற்றத்தில் காணப்படும் பௌதிக, பண்பாட்டு அம்சங்களை ஒரு அளவுத்திட்டத்திற்கு ஏற்ப வரைகின்ற படம்.
   (1) கருப்பொருள் படம்
   (2) தரைத்தோற்றப் படம்
   (3) இடவிளக்கப்படம்
   (4) நீர்ப்பரம்பல் படம்
   (5) அரசியல் பிரிவுப் படம் (………)

2. தனி அமைவிடம் என்பது.
   (1) ஒரு இடத்தின் அமைவிடத்தினை வேறொரு அம்சத்துடன் தொடர்புபடுத்திக் குறிப்பிடுவது.
   (2) அகலக்கோடு, நெடுங்கோடு அடிப்படையில் குறிப்பிடுவது.
   (3) அளவுத்திட்டத்தின் அடிப்படையில் குறிப்பிடுவது.
   (4) படக்குறி விளக்கங்களின் அடிப்படையில் குறிப்பிடுவது.
   (5) பௌதிக, பண்பாட்டு அம்சங்களின் அடிப்படையில் குறிப்பிடுவது. (………)

3. 1:50,000 என்ற அளவுத்திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தில் பாதுகாக்கப்பட்ட வன எல்லையைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படும் நிறம்
   (1) கறுப்பு (2) சிவப்பு (3) பச்சை (4) கபிலம் (5) நீலம்
   (………)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

4. பின்வருவனவற்றிலிருந்து வெளியீட்டு மூலகங்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க.
   (1) காந்த இறுவட்டு, விசைப்பலகை
   (2) விசைப்பலகை, வருடிகள்
   (3) வருடிகள், காந்த இறுவட்டு.
   (4) விசைப்பலகை, அச்சு உபகரணம்.
   (5) திரை, அச்சு உபகரணம் (………)

5. புவியியல் தகவல் முறையில் பயன்படுத்தப்படும் பரவல் தரவில் புவியியல் அம்சங்கள் எடுத்துக் காட்டப்படுவது.
   (1) புள்ளிகளாக (2) கோடுகளாக (3) பல்கோணிகளாக
   (4) நிரல்கள், நிரைகளாக (5) செவ்வகங்களாக (………)

6. "புவி மேற்பரப்பின் பரப்பு ரீதியான வேறுபாடுகளைக் கற்றல்" புவியியல் என வரைவிலக்கணத்தினை முன்வைத்த அறிஞர்
   (1) ரிச்சட் ஹாட்சோன் (2) கால்ரிட்டர் (3) வொன் கம்போல்ட்
   (4) W.M.டேவிஸ் (5) D. கன்டோல் (………)

7. வளிக்கோளத்தில் நீராவி, முகில் உருவாக்கம் என்பன இடம் பெறும் மண்டலம்
   (1) படைமண்டலம் (2) இடைமண்டலம் (3) அயன் மண்டலம்
   (4) வெப்பமண்டலம் (5) மாறன் மண்டலம் (………)

8. பின்வருவனவற்றிலிருந்து தலையீட்டு நிலவுருவங்கள் உள்ளடங்கிய விடையைத் தெரிக.
   (1) எரிமலைக் கூம்பு, எரிமலைவாய்.
   (2) வில்லைத் தீப்பாறை, ஆட்பிளவுக் கற்குகை
   (3) சாம்பல் கூம்பு, லாவாக்கூம்பு
   (4) பாதாளக் கற்குகை, கூட்டெரிமலை.
   (5) குமிழ் தீப்பாறை, எரிமலைக் குமிழ்கள். (………)

9. ஆற்றின் முதிர்ச்சிப் பருவத்தில் காணக்கூடிய பண்பு.
   (1) சரிவின் தன்மை அதிகம்.
   (2) நீரின் வேகம் அதிகம்.
   (3) அரித்தல் அதிகளவில் நிகழும்.
   (4) பருப் பொருட்களைக் கொண்டு செல்லும் தன்மை அதிகம்.
   (5) நிலைக்குத்துச் சுரண்டல் ஏற்படும். (………)

10. யாடாங்கு, பாறைச்சமவெளி, மேசா, பீடைக்கிடைத்திணிவு போன்ற நிலவுருவங்களை உருவாக்குகின்ற புறவிசைக் கருவி.
   (1) ஓடும் நீர் (2) மலைப்பனிக்கட்டியாறு (3) கடலலை
   (4) கண்டப்பனிக்கட்டியாறு (5) காற்று (………)

11. உலகின் இன்றைய குடித்தொகை ஏறத்தாழ,
   (1) 7 பில்லியன் (2) 8 பில்லியன் (3) 9 பில்லியன்
   (4) 8 பில்லியன் (5) 10 பில்லியன் (………)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

12. சனத்தொகைக் கூம்பின் சுருங்கும் கட்டத்தில் காணப்படும் பண்பு.
   (1) பிறப்பு, இறப்பு வீதம் குறைவடைந்தும் ஆயுள் எதிர்பார்ப்பு அதிகரித்தும் காணப்படும்.
   (2) பிறப்பு, இறப்பு வீதம் அதிகரித்தும் ஆயுள் எதிர்பார்ப்பு குறைந்த மட்டத்திலும் காணப்படும்.
   (3) பிறப்பு வீதம் உயர்வாகவும், ஆயுள் எதிர்பார்ப்பு மட்டம் சிறிது அதிகமாகவும் காணப்படும்.
   (4) பிறப்பு, இறப்பு வீதம் குறைவாகவும் ஆயுள் எதிர்பார்ப்பு அதி உயர்வாகவும் காணப்படும்.
   (5) பிறப்பு, இறப்பு வீதம் குறைவாகவும் ஆயுள் எதிர்பார்ப்பு மட்டம் மிகக் குறைவாகவும் காணப்படும். (………)

13. இலங்கையின் நவீன கிராமங்கள், கிராமிய நிலையங்கள், பிரதேச நிலையங்கள், சிறுநகரங்கள், என்ற இயல்புகளைக் கொண்டு அமைந்திருக்கும் குடியிருப்பு வகை.
   (1) உலர்வலயக் கிராமங்கள்
   (2) ஈரவலயக் குடியிருப்புக்கள்
   (3) மகாவலிக் குடியிருப்புக்கள்
   (4) மரபுரீதியான கைத்தொழில் கிராமங்கள்
   (5) தோட்டக் குடியிருப்புக்கள் (………)

14. இலங்கையில் நகரங்களை இனங்காண்பற்குப் பயன்படுத்தப்படும் கட்டளைக்கற்கள்.
   (1) கலாசார அம்சங்கள்.
   (2) நிர்வாக நியதிகள்
   (3) சேவை மையங்கள்
   (4) பொருளாதார நடவடிக்கைகள்
   (5) சனத்தொகைப்பரம்பல் (………)

15. ஒரு நாட்டின் நகரமாக்க மட்டம் உயர்வடைவதில் செல்வாகுச் செலுத்தும் காரணிகளில் ஒன்று.
   (1) பிறப்பு வீதக் குறைவு
   (2) இறப்பு வீத அதிகரிப்பு
   (3) நகரங்களின் இயற்கை அதிகரிப்பு
   (4) சேவைமையங்களின் அதிகரிப்பு
   (5) விவசாயப் பொருளாதாரம் (………)

(15 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# பகுதி II

**அறிவுறுத்தல்கள்:**

- **பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் வியைளித்தல் வேண்டும்.**
- **இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு *1 : 50,000* அளவுத்திட்டத்திலமைந்த இடைவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும், உலகப்புறவுருவப் படமும் வழங்கப்படும்.**

*1.* இலங்கை நில அளவைத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட *1 : 50,000* அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

குறிப்பு

- **விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும், அதன் உப பிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.**
- **இடவிளக்கப்படத்தின் மேல் விடைகள் எழுதப்படக் கூடாது.**
- **உமது விடைத்தாளுடன் தரப்பட்டுள்ள இடவிளக்கப்படத்தினை இணைக்க வேண்டும்.**

(i) *1 - 4* வரை குறித்துக்காட்டப்பட்டிருக்கும் அம்சங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) படத்தில் காட்டப்பட்டுள்ள X இல் இருந்து Y வரையான கோட்டிற்கு குறுக்கு வெட்டு முகம் ஒன்றினை வரைக. *(03 புள்ளிகள்)*

(iii) (a) B423 பிரதான வீதியின் நீளத்தினைக் Km தருக. *(01 புள்ளி)*

(b)இப்பிரதேசததில் செய்கை பண்ணப்படும் பெருந்தோட்டப்பயிரினைப் பெயரிடுக.*(01 புள்ளி)*

(iv) படப் பிரதேசத்தின் பரப்பளவை சதுர Km தருக. *(02 புள்ளிகள்)*

(v) சதுரம் A யை *1 : 25,000* என்ற அளவுத்திட்டத்தில் வரைக. *(02 புள்ளிகள்)*

(vi) படப் பிரதேசத்தின் கிழக்கு அரைப் பகுதியில் நெற்பயிர்ச் செய்கைப் பரம்பலைத் தீர்மானித்த இரண்டு காரணிகளை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(vii) படப்பிரதேசத்தின்

(A) குடியிருப்பு வடிவங்களை ( Parrern) யும்

(B) அதன் செயற்பாட்டையும் (Function) விளக்குக. *(05 புள்ளிகள்)*

*2.* தரப்பட்டுள்ள உலகப்புறவுருவப் படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

| | |
|---|---|
| (i) றொக்கி மலைத்தொடர் | (vi) சாகலின் தீவு |
| (ii) கொங்கோ நதி | (vii) அகுகாஸ் நீரோட்டம் |
| (iii) அமேசன் காடு | (vii) ஜகார்த்தா |
| (iv) ஜிப்ரோட்டர் நீரிணை | (ix) முதலாவது சூழல் மகாநாடு நடைபெற்ற நகரம் |
| (v) மத்திய கோடு | (x) எட்னா எரிமலை காணப்படும் தீவு. |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி III

### "அ" பகுதி – செய்முறைப் புவியியல்

3.

(i) புவியியல் தகவல் முறைமை (GIS) என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) புவியியல் தகவல் முறைமையின் (GIS) பிரதான கூறுகள் நான்கினைப் பெயரிட்டு இரண்டின் பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை (GPS) யின் அடிப்படைப் பிரிவுகள் இரண்டினை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) தொலையுணர்வு தொழில்நுட்பம் (RS) தரவு சேகரிப்பதற்குப் பயன்படுகின்ற மூன்று நுட்பமுறைகளைத் தருக. (03 புள்ளிகள்)

4.

(i) செய்முறைப் புவியியலில் பயன்படுத்தப்படுகின்ற நான்கு நுட்ப முறைகளைப் பெயரிடுக (02 புள்ளிகள்)

(ii) கருப் பொருள் படம் என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)

(iii) இடவிளக்கப்படத்தின் மூன்று பயன்பாடுகளை விபரிக்குக. (05 புள்ளிகள்)

(iv) இடவிளக்கப்படங்களில் பயன்படுத்தப்படுகின்ற அம்சங்களை சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றினைப் பௌதிக, பண்பாட்டு அம்சங்கள் எனப் பாகுபடுத்துக.

சமவெளி, பிரதான வீதி, குளம், மேட்டு நிலம், பாதுகாக்கப்பட்டவன எல்லை, மணல் குன்று, ஆறு, பின்னிய ஆறு, நீர்ப்பாசனக் கால்வாய், நெல் அமைக்கப்பட்ட பிரதேசம், நீரேந்து பிரதேசம். (04 புள்ளிகள்)

### "ஆ" - பகுதி பௌதிகப் புவியியல்

5.

(i) வானிலை, காலநிலை என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) புவி வெப்பப்பரம்பலில் செல்வாக்குச் செலுத்துகின்ற மூன்று காரணிகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iii) படிவு வீழ்ச்சியின் மூன்று வகைகளைக் குறிப்பிட்டு ஒன்றின் இயல்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) நீரியல் வட்டச் செயன்முறையை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

6.

(i) ஆற்றுச்சிறை என்பதனால் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) ஆற்றின் அரித்தல் செயல்முறைகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iii) ஆற்றரிப்பின் அரித்தல் நிலவுருவங்கள் மூன்றினை விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஆற்றின் முதுமைப் பருவத்தில் உருவாகின்ற மூன்று நிலவுருவங்களை விளக்கப்படத்தின் உதவியுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## "இ" - பகுதி மானிடப் புவியியல்

7.

(i) குடித்தொகையின் சமனற்ற பரம்பலின் செல்வாக்குச் செலுத்துகின்ற பௌதிகக் காரணிகள்இரண்டு, மானிடக் காரணிகள் இரண்டு என்பவற்றைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) உலகில் குடித்தொகை

(a) அதிகளவாக காணப்படும் இரண்டு பிரதேசங்கள்

(b) குறைவாகக் காணப்படும் இரண்டு பிரதேங்களைப் பெயரிடுக.
அடர்த்தி அதிகமாகக் காணப்படும் பிரதேசம் ஒன்றின், அடர்த்தியை தீர்மானித்த இரண்டு காரணிகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) குடித்தொகையுடன் தொடர்புடைய மூன்று பிரச்சினைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் குடித்தொகை அடர்த்தியின் போக்கு தொடர்பாக விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

8.

(i) நகராக்கம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) நகராக்கச் செயல்முறையில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று காரணிகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் நகராக்கத்துடன் தொடர்புடைய மூன்று போக்குகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) அபிவிருத்தி அடைந்த, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நகராக்கம் தொடர்பாகக் காணப்படும் மூன்று பொதுப் பிரச்சினைகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு நடாத்தும் இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023

தரம் 12 (2024) புவியியல்



# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

## பரீட்சை - 2023 (ஐப்பசி)

# National Field Work Centre, Thondaimanaru.

NFWC

### SRI LANKA 1 : 50,000 – SHEET No.76 – HAPUTALE (PART OF)




SCALE 1:50000